அதிகாரிகள் கொடுக்கின்றவைகளை பாடப்புத்தகம் போல் ஒப்பித்துவிட்டுப் போவது பொறுப்புக்கு உகந்ததாக இருக்காது என்ற நேர்மையான காரணத்தால்தான் நான் அதைக் கேட்டிருக்கிறேன். நான் பேரவைத் தலைவர் அவர்களிடம் சொல்லிக் கொண்டதும் அதுதான். நானும் என்னுடைய பொறுப்பை உணர்ந்து, நான் மிகவும் எச்சரிக்கையாகக் கடைமையைச் செய்ய வேண்டுமென்ற நிலைமையில் விரைவில் விவரங்களைச் சேகரித்துக் கொடுக்கிறேன் அதோடு மட்டுமல்லாமல் இன்றையதினம் பகலில் மாணவர்கள் தலைவர்களை, பிரின்சிபால்களை அழைத்து கல்வியமைச்சர் பேச இருக்கிறார்கள். அதையும் சேர்த்து, மற்ற விவரங்களையும் சேகரித்து நாளையதினம் இந்தக் கேள்விகளுக்கு சரியான பதில் கொடுக்க முடியும் என்று கருதுகிறேன்.

4. அறிக்கை அளித்தல்

நிதிநிலை அறிக்கை உரை குறித்து நிதி அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் 25—7—1977 அன்று காலையில் பேரவையில் ஆற்றிய நிதிநிலை அறிக்கையின் உரையில் 32-வது பக்கத்தில் 50-வது பாராவில் உள்ள கடைசி வாக்கியத்தில் குறிப்பிட்டுள்ள 'தெளிந்த சாராவி' (Rectified spirit) மீதான ஆயத் தீர்வை ஒரு முழு லிட்டருக்கு (Bulk litre) தற்போதுள்ள 50 காசிலிருந்து 80 காசாக உயர்த்தப்படும் என்று பேரவையில் அறிவித்தேன். அவ்வாறு அறிவித்ததற்குப் பிறகு ஒரு திருத்தமும் அறிவிக்கப்பட்டு அது தற்போதுள்ள 80 காசு 110 காசாக உயர்த்தப்பட வேண்டுமென்ற திருத்தமும் பேரவை உறுப்பினர்களுக்குத் தரப்பட்டது. ஆனால் மேலவையில் நான் இதை எனது உரையிலே திருத்தி முழு லிட்டருக்கு (Bulk litre) ஆயத் தீர்வை 80 காசு 110 காசாக உயர்த்தப்படும் என்பதை அறிவித்தேன் ஆனால், பல்க் லிட்டருக்குத் தற்போது இருக்கும் தீர்வை 50 காசுதான். ஆகவே, பேரவை உரையில் முதலில் குறிப்பிடப்பட்ட "பல்க் லிட்டருக்கு 50 காசிலிருந்து 80 காசாக உயர்த்தப்படும்" என்பதே சரியானது. இப்போது அதிகப் படுத்தப்பட்டுள்ள தீர்வையில் ஒன்றும் மாற்றம் கிடையாது என்பதை அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நேற்றையதினம் ஒரு திருத்தம் அவரவர் வீட்டுக்கு வந்து சேர்ந்தது. அந்தத் திருத்ததை நான்

குறித்து வைத்துக் கொண்ட நிலையில் இப்போது இன்னொரு திருத்தம் சொல்லப்பட்டிருக்கிறது. மதுப் பிரச்சினையில் இவ்வளவு குழப்பமும், மயக்கமும் ஏற்பட என்ன காரணம் என்று தெரியவில்லை. அதிகாரிகளாக இருப்பவர்கள் முன்கூட்டியே திட்டவட்டமாக வரையறுத்து விளக்கமான கருத்தைத் தந்திருப்பார்களானால், அந்த வகையில் அமைச்சர் அவர்களுக்குப் போதுமான அளவுக்கு ஒத்துழைத்திருந்தால் இந்த அளவுக்குக் குழப்பமான நிலைமை ஒரு நிதிநிலை அறிக்கையில் ஏற்பட்டிருக்காது. இப்படிப்பட்ட தவருன புள்ளிவிவரத்தைத் திருத்துகிறீர்கள் என்பதை வரவேற்கிற அதே நேரத்தில் என்னுடைய எண்ணத்தில்—இந்த அளவுக்கு ஏதோ ஒரு தரக்குறைவோ, பொறுப்புக் குறைவோ இருப்பதாக ஐயுறுகிறேன். அதைச் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இதிலே என்ன தரக்குறைவு இருக்கிறது என்று புரியவில்லை. மெத்தப் படித்த மேதை பேராசியர் 'தரக்குறைவு' என்ற வார்த்தையைப் பயன்படுத்த இதில் என்ன இருக்கிறது என்று புரியவில்லை. தவறு நடந்திருக்கிறது, திருத்தியிருக்கிறோம், பெருந்தன்மையைப் பாராட்டுங்கள்.

திரு. க. அன்பழகன்: நான் விளக்கத்திற்காகச் சொல்லுகிறேன். தவறைக் கண்டிப்பதற்காகச் சொல்லவில்லை. இந்த வரி அமைப்புக் கொள்கையை எடுத்துச் சொல்லுகிறபோது 'நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் மதுவிலக்குக் கொள்கைக்கு ஒவ்வ, அண்டை மாநிலங்களில் நிலவும் வீதங்களுக்கு ஏற்ப, இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபான வகைகளின் மீதான ஆயத் தீர்வை புருப் லிட்டர் ஒன்றுக்குத் தற்போதுள்ள 14 ரூபாயிலிருந்து 17 ரூபாய்க்கு உயர்த்தப்படும்' என்று சொல்லி 'இதனுல் மது அருந்துவோருக்கு உடல் நலனும், அது இல்லாவிட்டால் பொது நலனுக்காக அரசுக்கு வருவாயாயினும் கிடைக்கும்' என்று கூறியிருக்கிறீர்கள்.....

THE HON. THIRU G. R. EDMUND: Mr. Speaker, Sir, under Rulc 82 the Hon. Minister has made a statement on the floor of the House, with the consent of Hon. Speaker and under that Rule, there could not be any discussion on that statement I am bringing this to your notice I would request you to give your decision.

திரு. க. அன்பழகன்: நான் சொன்ன அந்தத் தொடரை நம்முடைய முன்னவரவர்கள் நிதியமைச்சர் அவர்கள் நினைவில் வைப்பார்கள் என்று கருதுகிறேன். ''மது அருந்து

வோருக்கு உடல்நலன்; அது இல்லாவிட்டால் பொதுநலனுக்கு வருவாய்' என்ற கருத்து ப்ரொகிபிஷன் இல்லாத நாட்டில் வழங்கும் இயல்புடையத் தொடர். அது ஆங்கிலத்தில் உள்ள தொடரின் நேரடியான மொழிபெயர்ப்புத்தான். மது அருந்துவோர்க்கு உடல் நலம் ஏற்படும் என்பது இதனுடைய நோக்கம். மது அருந்துவோருக்கு உடல் நலம் கிடைக்காது என்பதுதான் மதுவிலக்கை ஏற்றுக் கொண்ட அரசுக்கு முதல் கருத்தாக இருக்க முடியும்...............

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மன்னித்துக் கொள்ள வேண்டும். பட்ஜெட் விவாதத்தின்போது அருள்கூர்ந்து இவை பற்றிப் பேசக் கேட்டுக் கொள்கிறேன். எனது அறிக்கைக்குப் பிறகு தயவுசெய்து இதைப்பற்றிய சர்ச்சையை விட்டுவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

Mr. SPEAKER: Under Rule 82 A(I) a statement may be made by a Minister on a matter of public importance with the consent of the Speaker, Under Rule 82 A (2), there shall be no discussion on such a statement at the time when it is made. அதனால் இதைப்பற்றி விவாதம் வேண்டாம்.

Thiru A. RAHMAN KHAN: Sir this is not a debate but it is a matter of explanation or clarification.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்; தயவுசெய்து. எனக்கு நீங்கள் சொல்லிக் கொடுத்ததற்காக நன்றி. இரண்டு பேர்களும் விவாதத்தை உருவாக்கிக் கொள்கிறார்கள். அதைப் புரிந்து கொள்ளுங்கள், அமருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பேராசிரியர் அவர்களும் இரண்டு பேரும் விவாதம் துவக்கிக் கொள்கிறார்கள்.

அடுத்து, 1977–78ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்......

3. தகவல் கோரல் (தொடர்ச்சி).

(ஆ) உரிமைப் பிரச்சினைகள் சிலவற்றை எடுத்துக்கொள்வது குறித்து.

திரு துரை முருகன் : தலைவர் அவர்களே, நான் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொடுத்து 2 நாளாகிவிட்டது, அது இந்த அவைக்கு வரவில்லையே, அதைப்பற்றிய விவரம் அறிய விரும்புகிறேன்.